***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*

**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026, p335-349** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்களில் சமுதாயச் சித்திரிப்பு

*Social Portrayal in Na. Muthukumar's Film Songs* (A Study Centered on Family Relationships)

**க. இம்தாதுல்லாஹ்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
**K. Imthadullah*,**
*Ph.D. Research Scholar*
*Department of Tamilology, Annamalai University, Annamalai Nagar*
*Email: imbilali92@gmail.com*
**முனைவர் செ. பாலு,**
நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
**Dr. S. Balu,**
*Research Supervisor & Associate Professor*
*Department of Tamilology, Annamalai University, Annamalai Nagar*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **08-09-2026**

*Corresponding Author
Email:
*mbilali92@gmail.com*

**Abstract:**
In the tradition of Tamil film music, Na. Muthukumar is a notable poet who seamlessly combined poetic nuance with life philosophy. In simple language and deep emotional nuance, he expressed the subtleties of human relationships, the complexities of the family structure, and the affectionate bonds that exist in society. This research paper analyzes the social portrayals in Na. Muthukumar's film songs, particularly focusing on family relationships such as mother, father, elder brother, sister-in-law, elder sister, younger brother, younger sister, grandmother, grandfather, and paternal relatives. This article analyzes the writer's technique in expressing the hardships and pressures occurring in society through his songs, using dictionary definitions, scholars' opinions, and original song lyrics.

**Keywords:** *Society, Na. Muthukumar, Struggle, Relationships, Creative Technique, Film Song, Family.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்த் திரையிசைப் பாடல் மரபில் கவிதை நயத்தையும் வாழ்வியல் தத்துவத்தையும் ஒருங்கே இணைத்துப் படைத்த கவிஞர்களுள் நா.முத்துக்குமார் குறிப்பிடத்தக்கவர். மனித உறவுகளின் நுட்பங்களை, குடும்ப அமைப்பின் சிக்கல்களை, சமூகத்தில் நிலவும் பாசப் பிணைப்புகளை எளிய நடையிலும் ஆழமான உணர்வுநிலையிலும் அவர் தம் பாடல்களில் வடித்துள்ளார். இவ்வாய்வுக் கட்டுரை, நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களில் இடம்பெறும் சமுதாயச் சித்திரிப்பினை, குறிப்பாக தாய், தந்தை, அண்ணன், அண்ணி, அக்கா, தம்பி, தங்கை, பாட்டி, தாத்தா, பங்காளி முதலிய குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டு ஆராய்கின்றது. சமூகத்தில் ஏற்படுகின்ற இன்னல்களையும் அழுத்தங்களையும் தன் பாடல்களின் மூலமாகப் படைப்பாளர் படைத்திருக்கின்ற நுட்பத்தினை அகராதிக் கருத்துகள், அறிஞர் கருத்துக்கள், மூலப் பாடல் வரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கின்றது.

**திறவுச் சொற்கள்**

சமூகம், நா. முத்துக்குமார், போராட்டம், உறவுமுறைகள், படைப்பு நுட்பம், திரையிசைப் பாடல், குடும்பம்

## 1. முன்னுரை

மனித சமுதாயத்தில் உறவுகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. மனிதன் பிறப்பிலிருந்து இறக்கும் வரை உறவுகளோடு இணைந்து வாழ்கின்றான். ஆணும் பெண்ணும் இணையும் இல்லற வாழ்வில் கணவன் மனைவி எனும் உறவு மலர்கிறது. அவர்களுக்குக் குழந்தை பிறந்தவுடன் தாய், தந்தை எனும் புதிய உறவு தோன்றுகிறது. மனித சமூகத்தில் உறவுகளாகக் கணவன், மனைவி, மகன், மகள், தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமா, அத்தை என்ற பல்வேறு உறவுகளை, கவிஞர் தாம் எழுதிய திரையிசைப் பாடல்களின் மூலம் எவ்வாறு சித்தரிக்கிறார் என்பதனை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

நவீன தமிழ்த் திரையிசைப் பாடல் மரபில் வெறும் காதல், பொழுதுபோக்குக் கூறுகளுக்கு அப்பால், வாழ்வியல் தத்துவத்தையும் சமூக யதார்த்தத்தையும் கொண்டுவந்த கவிஞர்களுள் நா.முத்துக்குமார் தனித்துவம் வாய்ந்தவர். குடும்ப அமைப்பினுள் நிகழும் நுண்ணிய உணர்வுப் பரிமாற்றங்களை அவர் எளிமையான சொற்களால் வலிமையாகப் பதிவு செய்துள்ளார். இக்கட்டுரையில் அகராதிக் கருத்துகள், அறிஞர் கருத்துக்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் தொடர்ச்சியாக அவரது பாடல் வரிகளை மேற்கோளாகக் காட்டி பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**

## 2. உறவுகள் குறித்து அகராதியின் கருத்துக்கள்

உறவு என்பதற்கு,

*"உறுசமயம், எறும்பு, ஐக்கம், ஒற்றுமை"*[1]

என்று மதுரை தமிழ்ப் பேரகராதியில் கூறப்பட்டுள்ளது. மேலும் உறவு என்பதற்குக் கிரியாவின் தற்கால அகராதியில்,

*"பிறந்த குடும்பத்தின் மூலமாகவோ திருமணத்தின் மூலமாகவோ ஏற்படும் சொந்தம்"*[2]

என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

*"மனிதன் தனித்து வாழ்வதில்லை. மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு பிணைந்து வாழ்கின்றான்.*

*பிறருடன் அவனுக்கு ஏற்படுகிற உறவு பிணைப்புகள் ஒரே வகையினதாகவோ ஒரே*

*நிலையினதாகவோ ஒரே வாயிலாகவோ அமைவதில்லை"*[3]

என்று வாழ்வியல் களஞ்சியத்தில் மனித உறவுகள் ஏற்படும் சூழலை விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவ்வகராதிக் கருத்துகள் யாவும் உறவு என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்டதன்று; அது பன்முகப்பட்ட மனித இணைப்புகளின் தொகுப்பு என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

## 3. உறவு குறித்து அறிஞர் கருத்துக்கள்

உறவுகள் என்ற சொல் பற்றி அறிஞர்கள் பலரும் பேசியுள்ளனர். உறவுகளின் மூலம் வாழ்வியல் நெறியையும், பண்பாட்டையும் வளர்ப்பதில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உறவு தேவைப்படுகிறது என்பதனை அறிந்து,

*"உறவுகள் அறிவுப்பூர்வமாகப் பின்னப்படுவதில்லை. உணர்வு எனும் வளையால் அவை விஸ்தரிக்கப்படுகின்றன. உணர்வுகளின் ஆழம்தான் உறவின் வலிமை"*[4]

என்று எம்.எஸ்.உதயமூர்த்தி உறவுகள் என்பது உணர்வுகளின் ஆழமென்றே கூறுகிறார்.

உறவுகள் என்பது ஒரு போதும் பிரிக்கவும் அழிக்கவும் முடியாது; அது தொடர்ந்து கொண்டே போகும் தன்மை உடையது என்பதை,

*"வாழ்க்கையின் தேவைகளுக்கு ஒவ்வொருவனும் ஏதேனும் ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். அவனாகத் தொழில் செய்தாலும் சரி,*

*அல்லது இன்னொரு அலுவலகத்தில் வேலை பார்த்தாலும் சரி, அது தொடர்பாய்*
*பல்வேறு மனிதர்களுடன் உறவு கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு*
*இருக்கிறது.*
*அது மட்டுமல்ல அண்டை அயலாருடன் உறவு, அன்றாட வாழ்க்கைத்*
*தேவைகளுக்காகப் பல்வேறு மக்களுடன் கொள்ள வேண்டிய உறவு என்று*
*உறவுகள் பல வகையிலும் தொடர்ந்து கொண்டே போகின்றன"*[5]

என்று பி.சி.கணேசன் கூறியுள்ளார். இக்கருத்துகளின் தொடர்ச்சியாக, நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்கள் இந்த உணர்வுப் பிணைப்புகளை எவ்வாறு உருவகித்துக் காட்டுகின்றன என்பதனை அடுத்த பகுதியில் ஆராயலாம்.

## 4. நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்களில் உறவுகள்

கவிஞர் நா.முத்துக்குமார், குடும்ப அமைப்பினுள் அமையும் ஒவ்வொரு உறவையும் தனித்தனி உணர்வுநிலையில் அணுகி, அவற்றின் சமூகப் பங்களிப்பையும் உணர்ச்சிப் பாதிப்பையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். தாய், தந்தை என்ற அடிப்படை உறவுகளிலிருந்து தொடங்கி, அண்ணன், அண்ணி, அக்கா, தம்பி, தங்கை, பாட்டி, தாத்தா, பங்காளி என விரிவடையும் உறவு வலையமைப்பினை அவரது பாடல் வரிகள் வழி கீழே பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

### 4.1 தாய்

அம்மா இவ்வார்த்தை அறியாத உயிரினங்களே இல்லை என்றே கூறலாம். தாய் அன்பின் உச்சம், தாய் அன்பின் ஆணிவேர், தாய் எல்லா வீடுகளிலும் சமூக சேவகி, தாய் கடவுளுக்கு ஒப்பானவள், தாயின் சேவை எல்லா உயிரினங்களுக்கும் தேவையே என்பதனை,

*"கருவறையில் கிடந்தபடி பிரபஞ்சத்தை உற்றுநோக்கும் கடவுளின் புன்னகையைப்*
*போல முடியுறாமல் புன்னகைத்துக் கொண்டே இருப்பவள்"*[6]

என்ற வரிகளின் மூலம் தாயின் அன்பினையும், கருணையில் கடவுளைவிட மேலானவள் எனவும் தம் படைப்பில் எடுத்துரைக்கிறார்.

மேலும் தாயை இழந்து தவிக்கும் குழந்தையின் நிலையினைக் கூறும் கவிஞர்,

*"அழுது புலம்பி, நான் அலறிய ராத்திரியில்*
*நிலா இருந்தது, சோறும் இருந்தது*
*ஊட்டத்தான் நீ இல்லை அம்மா"*[7]

நிலாச்சோறு சாப்பிடாத குழந்தைகளே இல்லையென்றே கூறலாம். இக்குழந்தைக்கோ நிலவும், சோறும் இருந்தும்கூட ஊட்ட தாய் இல்லை என்று குழந்தை ஏங்குவதாகக் கூறுகிறார்

கவிஞர். உலகம் அம்மாவுக்குள் அடக்கம் என்பதனை,

*"ஆகாயம் நீ, அதில் சுற்றிச் சுடரும் சூரியன் நீ,*

*நிலம், நீர், காற்று, நதியும் நீ"*[8]

என்று பிரபஞ்சம் முழுவதும் நீயே தான் வாழ்கிறாய் அம்மா; உனக்கும் உன் தாயன்பிற்கும் அழிவே இல்லை என்றும் கூறுகிறார் கவிஞர். மேலும் தன் குழந்தையின் உடல் நலத்தைப் பேணிக் காக்கும் தாய்மார்களின் நிலையினைக் கூறும் கவிஞர், தாயின் சமையல் ருசிப்பதாகக் கூறுகிறார். கூட்டுக் குடும்பத்தில் வளரும் மூத்தப் பிள்ளை தாயை இப்படி அழைக்கிறது என்று கூறுகிறார்:

*"கூட்டுக் குடும்பத்தில்*

*சித்தப்பாக்களுடன் வளர்ந்த*

*மூத்தப்பிள்ளை*

*அம்மாவை*

*அண்ணி என்றழைக்கும்"*[9]

இன்றைய சூழலில் கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு இருப்பதில்லை என்றும், அதனால்தான் உறவுகளின் ஆழம், மதிப்பு, மேன்மை போன்ற நற்பண்புகள் அழிந்து கொண்டே வருகின்றது என்றும், உறவுகள் சிதையுறாமல் இருக்க கூட்டுக் குடும்ப வாழ்வே சமுதாயத்திற்குத் தேவை என்பதனைத் தம் கவிதையில் கூறியுள்ளார் கவிஞர்.

### 4.2 தந்தை

எல்லாப் பிள்ளைகளுக்கும் தந்தை தான் முதல் கதாநாயகர். குடும்பச் சூழலைப் புரிந்து கொள்ளவும் சமூகத்தில் வாழவும் தன் பிள்ளைகள் தரமான வாழ்க்கை வாழ வழிவகைகளைக் கற்றுத் தரும் வழிகாட்டியாக அப்பாக்கள் இருக்கிறார்கள் என்பதனை,

*"எல்லாப் பிள்ளைகளுக்கும் அப்பாதான் முதல் கதாநாயகன்"*[10]

என்று தம் கவிதையில் கூறியுள்ளார். உலகின் முதல் அறிவாளி தானே என்றும், தனக்கும் பிறருக்கும் பிள்ளைகள் இரண்டாவது அறிவாளி என்றும் ஒவ்வொரு தந்தையும் எண்ணுவதாகக் கவிஞர் கூறுகிறார்.

*"என் அப்பா*

*ஒரு மூட்டை புத்தகம்*

*கிடைப்பதாக இருந்தால்*

*என்னையும் விற்று விடுவார்"*[11]

தந்தையின் உலகம் புத்தகம் வாசிப்பதுதான். அப்புத்தககத்திற்காகப் பிள்ளைகளை விற்கும்

தந்தைகளின் குணத்தைக் கிண்டலாகக் கூறுகிறார் கவிஞர். உலகத்தில் நடக்கும் நிகழ்வுகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு பிள்ளையும் தன் தந்தையின் உணர்ச்சிகளையும் கோபத்தையும் உள்வாங்கித்தான் வாழ்கிறது என்றும் வேறு புதியவற்றை நாம் செய்துவிடவில்லை என்றும் தன் கவிதையில் கூறும் இயல்பான வாழ்க்கை முறையினைக் காணமுடிகிறது.

*“தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே*
*தாலாட்டு பாடும் தாயின் அன்பும் தந்தை அன்பின் பின்னே*
*தகப்பனின் கண்ணீரைக் கண்டோர் இல்லை*
*தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை*
*என் உயிரணுவின் வரம் உன் உயிரல்லவா*
*மண்ணில் வந்த நான் உன் நகல் அல்லவா*
*காயங்கள் கண்ட பின்னே உன்னைக் கண்டேன்*
*கண்டிப்பிலும் தண்டிப்பிலும் கொதித்திடும் உன் முகம்*
*காய்ச்சல் வந்து படுக்கையில் துடிப்பதும் உன் முகம்*
*அம்பாரியாய் ஏற்றிக் கொண்டு அன்று சென்ற ஊர்வலம்*
*தகப்பனின் அணைப்பிலே கிடந்ததும் ஓர் சுகம்*
*வளர்ந்ததுமே யாவரும் தீவாய் போகிறோம்*
*தந்தை அவனின் பாசத்தை எங்கே காண்கிறோம்*
*நமக்கெனவே வந்த நண்பன் தந்தை”*[12]

எந்த ஒரு செயலிலும் தெய்வத்தின் துணையை முதலில் நாடுவோம். ஆனால் தந்தையின் அன்பிற்கு முன்னே எல்லாத் தெய்வங்களும் தோற்றுவிட்டதாகவும், தாலாட்டு பாடுகின்ற தாயின் அன்பு தந்தையின் அன்பின் பின்னே நிற்பதாகவும் தன் பாடலில் தந்தையின் பாசத்தைக் கொண்டாடுவதாக ‘கேடி பில்லா கில்லாடி ரெங்க’ என்ற திரைப்படத்தில் கூறியுள்ளார் கவிஞர். தாலாட்டு என்றால் தாய்தான் பாடுவாள் என்ற பொதுவான கருத்துள்ளது. இங்கே தந்தை தாலாட்டு பாடுவதாக அமைந்த பாடல்:

*“ஆரிரோ ஆரிரோ இது தந்தையின் தாலாட்டு*
*பூமியே புதிதானதே இவள் மழலையின் மொழி கேட்டு*
*தாயாக தந்தை மாறும் புதுகாவியம்*
*இவன் வரைந்த கிறுக்கலில் இவளோ புது ஓவியம்”*[13]

தந்தையின் தாலாட்டு புதுக் காவியமாகவும், குழந்தையின் மொழி கேட்டு பூமியே புதிதாக மாறுவதாகவும் ‘தெய்வத் திருமகள்’ என்ற படத்தில் தந்தையின் அன்பினைப் போற்றிப் பாடல்

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**

புனைந்துள்ளார் கவிஞர்.

### 4.3 அண்ணனின் உறவு

அண்ணன் அன்பின் ஆழமென்றே கூறலாம். தன் குடும்ப உறுப்பினர்களில் தந்தைக்குப் பின் குடும்பப் பொறுப்புகளைச் சுமப்பவன் என்றும், தன் தம்பி, தங்கைகளுக்காக உழைப்பவன் என்றும் தன் கவிதையில் கூறுகிறார்.

*"அண்ணன்கள் வெயிலின் வார்ப்புகள்*
*கோபத்தின் உக்கிரம் அப்படியே இருக்கிறது*
*இல்லை... இல்லை அண்ணன்கள் மழையின் மைந்தர்கள்*
*கண்ணீரின் ஈரத்தால் கண்டதால் சொல்கிறேன்"*[14]

என்று வெயிலும் மழையும் உரையாடுவது போல அண்ணனின் பொறுப்புணர்வினைக் கூறும் விதமாக அமைந்துள்ளன இவ்வரிகள். தன் தங்கைக்கு அண்ணன் அறிவுரை கூறும் பாங்கினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

*"குடும்பம்னா ஆயிரம் இருக்கும்*
*சண்டை சச்சரவு வரத்தான் செய்யும்"*[15]

என்ற வரிகளின் வாயிலாகக் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களுக்குப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று தங்கைக்கு அறிவுரை கூறுவதும், அண்ணனின் அறிவுரைப்படி தங்கை தன் கணவனுடன் புகுந்த வீடு செல்வதும், மேலும் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களுக்குப் பொறுத்துக் கொள்ளும் பண்பே தீர்வாகும் என்று வாழ்க்கையின் நிதர்சனத்தைக் கூறும் அண்ணன்களே தங்கைக்கும் தம்பிகளுக்கும் தகப்பனாகிறான் என்பதைத் தம் படைப்பில் எடுத்துரைக்கிறார்.

### 4.4 அண்ணியின் உறவு

அண்ணிகளின் வருகை திடீரென வந்துவிடுகின்றன என்பதனை,

*"தினம் தினம் நாம் பார்த்துக் கொண்டு*
*இருக்கும் செடியில் நமக்கே தெரியாமலே*
*திடீரென்று ஒருநாள் புதிதாகப் பூ பூத்து*
*இருப்பது போல நம் வீட்டுக்குள் வந்து*
*விடுகிறார்கள் அண்ணிகள்"*[16]

என்ற வரிகளின் மூலம் அண்ணிகள் புகுந்த வீட்டின் வருகையைப் பற்றிக் கூறியுள்ளார் கவிஞர். மேலும் கணவனுக்கும் கணவனின் குடும்பத்திற்கும் தினம் அயராது உழைப்பவர்கள் அண்ணிகள் என்று அண்ணியின் பெருமையைக் கூறுவதாக அமைகிறது.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**

*"இறைவன் நமக்காகப் படைக்கப்பட்ட*

*இன்னொரு தாயல்லவா அண்ணிகள்"*[17]

என்ற வரிகளின் வாயிலாக அண்ணிகள் இறைவனின் படைப்பு என்றும், அவர்களின் தாயுள்ளத்தைக் கூட்டுக் குடும்ப உறவு வாழ்க்கை முறையில் உணரமுடிகிறது என்றும் கவிஞர் முத்துக்குமார் தம் படைப்பில் கூறியுள்ளார்.

### 4.5 அக்காவின் பங்களிப்பு

அக்காக்கள் திருமணத்திற்கு முன் தன் வீட்டில் அனைத்து வேலைகளையும் பொறுப்புணர்வோடு செய்வார்கள். இந்த அக்காவோ திருமணத்திற்குப் பிறகும் தன் தாய்க்கு உதவி செய்கிறாள் என்பதை,

*"திருமணத்திற்குப் பிறகு*

*ஒரு சடங்கிற்காக*

*பிறந்த வீடு வந்த அக்கா*

*அம்மாவிற்கு*

*மீன் ஆய்ந்து தருகிறார்.*

*இங்கு வந்தும் வேலை செய்யணுமா என*

*அதட்டியும் கேளாமல்*

*பாத்திரம் தேய்த்து*

*துணி துவைக்கிறாள்*

*தோட்டத்தில்*

*தானே நட்டு வளர்த்த*

*செம்பருத்திச் செடியருகே*

*ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாள்*

*பூவரசம் மரத்தடியில் காத்திருந்து*

*பள்ளி விட்டு வரும்*

*தம்பியை அழைத்து வருகிறாள்.*

*மர பீரோவைத் திறந்து*

*பட்டு பாவாடையையும்*

*மாம்பழக் கலர் தாவணியையும்*

*பழைய பாசத்துடன் எடுக்கிறாள்*

*தாவணிக்கு பொருந்தாமல்*

*கழுத்தில்*

*தொங்கிக் கொண்டிருக்கிறது*

*புதிதாய் ஒரு மஞ்சள் தாலி"*[18]

பிறந்த வீடு வந்த அக்கா அம்மாவிற்கு மீன் ஆய்ந்து தருவதும், பாத்திரம் தேய்ப்பதும், துணி துவைப்பதும், பள்ளி விட்டு வரும் தம்பியை அழைத்து வருவதும் இயல்பானதுதான். ஆனால் புகுந்த வீட்டிற்குச் சென்ற அக்காள்கள் பழைய பாசத்தோடு தன் தாய்க்கும், தம்பி, தங்கைகளுக்கும் பொறுப்புணர்வோடு உழைப்பதனைத் தன் படைப்பில் வெளிப்படுத்தி உள்ளது நெஞ்சை நெகிழ வைக்கிறது. மேலும் 'ஈர நிலம்' எனும் படத்தில்,

*"அக்காக்கள் இல்லாத வீடு அரை வீடு*

*அண்ணிகள் வந்து நிறைப்பார்கள்"*[19]

என்று தன் திரைப்படப் பாடலில் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

*"இனி அந்த வீடு அக்காக்கள் வாழ்ந்த வீடு அல்ல;*

*அக்கா வந்து போகும் வீடு"*[20]

என்று தன் படைப்பில் அக்காக்களின் அன்பினை எடுத்தியம்பியிருப்பது போற்றத்தக்கதாக இருக்கிறது. மேலும் அன்றிலிருந்து இன்று வரை அக்காக்களின் வருகையால் ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் நிகழ்ச்சிகளின் ஒட்டுமொத்த நெகிழ்ச்சியே எனலாம்.

### 4.6 தம்பியின் மகிமை

கவிஞர் நா.முத்துக்குமார் தம்பி உறவைக் கூறுவதாக அமைந்த வரிகள்:

*"நான் மலர்ந்த தொப்புள் கொடியின் இன்னொரு பூ*

*என் உதிரத்தின் பங்காளி.*

*வேற்றுருவன் ஆனாலும் என் மாற்றுருவன்*

*நான் உண்ட மிச்சப் பாலின் ருசி அறிந்தவன்.*

*ஆதலால் என் பசி அறிந்தவன்.*

*என் நாணயத்தின் இன்னொரு பக்கம்.*

*துக்கத்தில் என்னை தாங்கும் தூண். சக ஊண்"*[21]

என்று தம்பிகளின் பண்புநலன்களைக் கூறுகிறார் கவிஞர். திருமணத்திற்குப் பிறகு அண்ணன் தம்பி உறவின் நிலையினைக் கூறுவதாக,

*"எந்தத் திசையில் வீசினாலும்*

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**

*காற்றின் ஈரம் காற்றில் இருப்பதைப் போல,*

*பிரிந்திருந்தும் சேர்ந்திருப்பது தானே சகோதரத்துவம்.*

*எனக்காக இன்னோர் இதயம் துடித்துக் கொண்டு இருக்கிறது"*[22]

எத்திசையில் வீசினாலும் காற்றின் ஈரம் காற்றில் இருப்பதைப் போலவே சகோதரனின் அன்பு பிரிந்திருந்தாலும் இணைந்தே இருக்க வேண்டும் என்று தன் படைப்பில் கூறியுள்ளது அண்ணன் தம்பிகளின் உறவின் மேன்மையைக் காணமுடிகிறது.

*"பெரிய பசங்க*

*விளையாடற இடத்துக்கு*

*வராதேன்னு சொல்றேன்ல என்று*

*தம்பி தலையில் குட்கிறான்"*[23]

தம்பியின் பாதுகாப்பை எண்ணித் தலையில் குட்டுகிறான். அண்ணன் அது தண்டிப்பது அல்ல; தம்பியிடம் உள்ள பாசத்தின் வெளிப்பாடே என்று தன் கவிதை வரிகளின் மூலம் அண்ணன் தம்பி உறவினைக் கூறுகிறார் கவிஞர்.

*"எல்லா தம்பிகளும் அண்ணன்களைவிட*

*முன் கோபிகள் ஆனால் தைரியசாலிகள்*

*அண்ணன் நிழலில் வளர்வதை*

*எந்தத் தம்பியும் விரும்புவது இல்லை"*[24]

என்று தம்பிகளின் முன்கோபத்தைக் கூறுவதாகக் கவிஞர் தன் படைப்பில் எடுத்துக் காட்டியுள்ளார்.

### 4.7 அக்காள் - தங்கை

தங்கை உறவைப் பற்றிக் கவிஞர் உணர்ச்சி பொங்கப் படைத்துள்ளதைக் காணலாம்.

*"அக்கா அக்கா என்று அக்கா பின்னாலேயே*

*சுற்றிக் கொண்டு இருக்கும் தங்கைகளை*

*அக்காக்கள் அன்போடு அரவணைத்து*

*தன் பிள்ளையை போல் வளர்ப்பர்"*[25]

தங்கை என்ற சொல்லுக்குத் தன் + கை என்றே பொருள்படும் என்று கூறுவர் பெரியோர்கள். தன் கையைப் போலப் பாதுகாப்பாகத் தங்கைகளை வளர்க்கின்றனர் அக்காக்கள். இது போன்ற அக்கா தங்கையின் பாசத்தினை உருக்கமாகக் கூறியுள்ளார் கவிஞர்.

### 4.8 அண்ணன் - தங்கை

தங்கை எல்லா வீடுகளிலும் செல்லக் குழந்தை. அவள் செய்யும் குறும்புகள்கூடச் சிரிப்பாகத்தான் இருக்கும் என்பதனை,

*"அண்ணன் சட்டையை அணிவதும்,*
*அக்கா தாவணியை தன்னுடையது என*
*அடம்பிடிப்பதும் தங்கையின் குறும்புத்தனமே"*[26]

என்று தங்கைகளின் குறும்புகளை நகையுடன் எடுத்துக் கூறியுள்ளது ரசிக்கத்தக்கதாகவே இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இது போன்ற நிகழ்வுகள் நடப்பது வழக்கமான ஒன்றே என்று தன் கவிதை வரிகளின் மூலம் கூறியுள்ளார் கவிஞர்.

*"அண்ணன் குளிச்சிட்டிருக்கு*
*உள்ளே வந்து*
*உட்காருங்கண்ணே*
*என்று வரவேற்று*
*தேநீர் போட்டு தருகிறார்கள்*
*நண்பர்களின் தங்கைகள்"*[27]

அண்ணன் தங்கையின் பாசத்தையும், அண்ணனின் நண்பர்களை அண்ணனாகவே பாவிக்கும் தங்கைகள் இருக்கும் வரை தங்கைகளின் நேசம் போற்றப்படும் என்று தன் கவிதையில் கூறுகிறார் கவிஞர்.

### 4.9 பாட்டி

அனுபவங்களைத் தன்னுள் அதிகமாகப் புதைத்து வைத்துள்ளவர்கள் ஆயாக்கள். அம்மாவைப் பெற்ற பாட்டி, அப்பாவைப் பெற்ற பாட்டி என்று கிராமங்களில் கூறுவதுண்டு. பாட்டிகள் என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். பாட்டிகள் அன்பானவர்கள்; அறிவாளிகள்; காது வளர்ந்தவர்கள் என்பதே இவ்வரிகளின் அடையாளம்.

*"தண்டட்டி காதுக்காரி*
*கெணத்துக்கு சேதி சொல்லு*
*கூட்டாக ஆட்டம் போட வரப் போறாக"*[28]

என்ற பாடல் 'ஈர நிலம்' படத்தில் கவிஞர் நா.முத்துக்குமார் எழுதியுள்ளார். பாட்டிகள் அறிவுரை கூறுவதும், மங்கலமான செய்திகளைச் சொல்வதும் பாட்டிகளின் பண்புகளாக இருக்கிறது என்றும், கிராமத்தில் நடக்கின்ற எல்லாச் செய்திகளையும் சேகரித்துக் கூறுபவர் என்றும் கவிஞர் கூறியுள்ளார்.

### 4.10 தாத்தா

தாத்தாக்கள், பேரன்கள், பேத்திகளின் உறவு என்பது உலகை வாழ்விக்கும், உன்னதமான, உண்மையான, ஆழமான, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளைப் போன்றது. அவ்வுறவிற்கு எவராலும் வேலி போட முடியாது என்பதனை,

*"நலமோடு இருப்பேன் இந்நகரில்*
*பின் தொடர்ந்து வரும் நீ திரும்ப வேண்டும்*
*உன் ரூபமற்ற வருகையை உணர்ந்து*
*இவைகளும் பூக்களும்*
*சலனிக்கின்ற இத்தெருவில்*
*திரும்பவும் சொல்கிறேன் தாத்தா*
*உன் பேரனாகிய நான்*
*பத்திரமாக இருப்பேன் இந்நகரில்"*[29]

இவ்வரிகளில் தாத்தா பேரனின் பாசப் பிணைப்பினையும் தோழமையையும் கூறும் இப்புதுப் படைப்பை நா.முத்துக்குமாரிடம் காணமுடிகிறது.

### 4.11 பங்காளிகள்

பங்காளிகளின் உறவைப் பற்றி 'சிவாஜி' என்ற படத்தில் பாடல் வரிகளின் மூலம் பங்காளிகளின் பாசத்தை அறியமுடிகிறது.

*"பங்காளி பக்கத்து வீட்டுக்கும்*
*சேர்த்து சமைக்கிற அன்பு இங்கு வாழும்"*[30]

பங்காளி உறவு என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் அனைவராலும் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளக்கூடிய உறவே என்று தம் திரைப்பட வரிகளில் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது எனலாம்.

### 5. உருவப்படம் — குடும்ப உறவுகளின் வரைபடம்

நா.முத்துக்குமார் தம் திரையிசைப் பாடல்களில் சித்தரித்துள்ள குடும்ப உறவுகளின் பன்முகத்தன்மையை ஒரு பார்வையில் புரிந்துகொள்ளும் வகையில், மேற்கண்ட பகுப்பாய்வில் இடம்பெற்ற பதினொரு உறவு வகைகளும் கீழ்க்காணும் உருவப்படத்தில் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**




*படம் 1: நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்களில் இடம்பெறும் குடும்ப உறவுகளின் தொகுப்பு வரைபடம்*

### 6. முடிவுரை

சமூகத்தில் மக்களின் உயர்வுக்கும் தாழ்விற்கும் உறவுகள் இன்றியமையாதவை. மனிதன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உறவுகள் அமைகின்றன என்பதனைக் கவிஞர் நா.முத்துக்குமார் தம் திரையிசைப் பாடல்கள் வழியாக உறவுகளின் மேன்மையையும் எடுத்துரைக்கிறார்.

திருமண உறவால் ஆண், பெண் இணைந்து கணவன் மனைவி ஆகின்றனர். பின்னர், அவர்களிலிருந்தே உறவுகள் மேலும் விரிவடைவதையும் காணமுடிகிறது. தாய்-தந்தை, அக்கா-தங்கை, அண்ணன்-தம்பி, அண்ணன்-தங்கை போன்ற உறவுகளின் மேன்மையை அறிந்துகொள்ளமுடிகிறது.

நாட்டின் முதுகெலும்பாக விளங்குவது குடும்பம். சமுதாயத்தின் வேராக விளங்குவது உறவுகள். வேர்கள் நன்றாக உயிரூட்டமாக, ஊட்டச்சத்தாக இருப்பதால்தான் மரம், செடி, கொடிகள் நன்கு பயன்தரும். இவற்றைப் போலவே குடும்பமும் குடும்ப உறவுகளும் நல்ல முறையில் சிறப்பாகவும், வளமாகவும், நலமாகவும் அமைய வேண்டும் என்பதனை நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்கள் கூறுவதைக் காணலாம்.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.26**

### 7. சான்றெண் குறிப்புகள்

1. மதுரைத் தமிழகராதி, ப.370.
2. க்ரியாவின் தற்கால அகராதி, ப.221.
3. வாழ்வியற் களஞ்சியம், ப.523.
4. எம்.எஸ்.உதயமூர்த்தி, மனித உறவுகள், ப.3.
5. பி.சி.கணேசன், வளமான வாழ்க்கைக்கு மனித உறவுகள், பக்.2-3.
6. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், பக்.16-18.
7. மேலது., ப.19.
8. மேலது., ப.21.
9. நா.முத்துக்குமார் கவிதைகள், ப.108.
10. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.24.
11. நா.முத்துக்குமார் கவிதைகள், ப.59.
12. நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்கள், பக்.43.
13. மேலது., ப.41.
14. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.77.
15. மேலது, ப.79.
16. மேலது., ப.123.
17. மேலது., ப.124.
18. நா.முத்துக்குமார் கவிதைகள், ப.82.
19. நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்கள் (கண் பேசும் வார்த்தைகள்), ப.67.
20. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.32.
21. மேலது., ப.36.
22. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.41.
23. நா.முத்துக்குமார் கவிதைகள், ப.207.
24. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.37.
25. மேலது., ப.83.
26. மேலது., ப.85.
27. நா.முத்துக்குமார் கவிதைகள், ப.174.
28. நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்கள் (கண் பேசும் வார்த்தைகள்), ப.66.
29. நா.முத்துக்குமார், அணிலாடும் முன்றில், ப.62.
30. நா.முத்துக்குமார் திரையிசைப் பாடல்கள், ப.9.

| Copyright © Author(s)

### 8. துணைநின்ற நூல்கள் (MLA பாணி மேற்கோள் நூற்பட்டியல்)

[1.] முத்துக்குமார், நா. நா. முத்துக்குமார் திரையிசைப் பாடல்கள். பட்டாம்பூச்சி பதிப்பகம், 2010.

[2.] முத்துக்குமார், நா. கண்பேசும் வார்த்தைகள் (திரையிசைப் பாடல்கள் தொகுப்பு). பட்டாம்பூச்சி பதிப்பகம், 2005.

[3.] முத்துக்குமார், நா. அணிலாடும் முன்றில். [பதிப்பக விவரம் கிடைக்கவில்லை].

[4.] முத்துக்குமார், நா. நா. முத்துக்குமார் கவிதைகள். [பதிப்பக விவரம் கிடைக்கவில்லை].

[5.] கணேசன், பி.சி. வளமான வாழ்க்கைக்கு மனித உறவுகள். கலைச்செல்வம் பதிப்பகம், 2007.

[6.] சிங்காரவேலு முதலியார், ஆ. வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி 8). தமிழ்ப் பல்கலைக்கழகம், 1991.

[7.] வையாபுரிப்பிள்ளை, எஸ். தமிழ் பேரகராதி. சென்னைப் பல்கலைக்கழகம், 1982.

[8.] உதயமூர்த்தி, எம்.எஸ். மனித உறவுகள். [பதிப்பக விவரம் கிடைக்கவில்லை].

[9.] க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி. க்ரியா பதிப்பகம், [ஆண்டு கிடைக்கவில்லை].

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*